## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்தச்) சட்டம்

---

*(1988, நவம்பர் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1988, டிசெம்பர் மாதம் 02 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 — தபாற் செலவு : சதம் 75

## 1988 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்தச்) சட்டம்

[1988, நவம்பர் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ. 39/86

**1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(3) நிதியத்தின் நிருவாகம், முகாமை, அத்துடன் கட்டுப்பாடு என்பன சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

"(உ) அமைச்சரினால் 100,000 உறுப்பினர்களுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கம் ஒவ்வொன்றினதும் நிறைவேற்றுநருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.

இப்பந்தியின் நோக்கத்திற்காக, தொழிற்சங்கம் ஒன்று தொடர்பில் "நிறைவேற்றுநர்" என்பது, தொழிற்சங்கங்கள் கட்டளைச்சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும்:—

"(2) சபையின் பிரதான நிறைவேற்றுநராக இருக்கவேண்டியவரான சபையின் தவிசாளர், அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம்:—

"(அ) இச்சட்டத்தின்கீழ் உதவுதொகைகளாக, மேலதிகக் கட்டணங்களாக, கடன்களாக, கொடைகளாக, வட்டிகளாக, பங்கிலாபங்களாக, உறுப்பினர்களால் அல்லது அவர்கள் சார்பில் தொழில்தருநர்களால் செலுத்தப்பட்ட வைப்புப் பணங்களாக வங்கிகளிலிருந்து அல்லது வேறு தோற்றுவாய்களிலிருந்து பெற்ற எல்லாத் தொகைகளையும் முதலீடுகளிலிருந்தும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களை விற்றதினால் பெறப்பட்டதான எல்லா காசுகளையும் அல்லது எத்தன்மைத்தான ஏதேனும் வேறுவகையான கொடுப்பனவுகளையும் பெற்று அத்தகைய எல்லாக் காசுகளையும் நிதியத்தில் வரவுவைத்தல் வேண்டும்;"

(2) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும்:—

"(அஅ) எத்தன்மைத்தான ஏதேனும் வகையில், ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளலாம் என்பதுடன் அதனை வைத்திருக்கலாம், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கலாம் அல்லது கொடுக்கலாம், ஈடுவைக்கலாம், அடகுவைக்கலாம், விற்கலாம் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கலாம்".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 8அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

5. பின்வரும் புதிய பிரிவானது 8 ஆம் பிரிவினை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 8அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"சபையின் இலச்சினை

8அ. சபையின் இலச்சினை—

(அ) சபையானது காலத்திற்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(இ) சபையின் அனுமதியுடனும், சபையின் இரண்டு உறுப்பினர்கள் சமூகத்திலுமன்றி, ஆவணம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக அவ் ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்."

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, "விரும்புகின்ற சுய தொழில்புரியும் ஆளொருவர்" என்ற சொற்களுக்குப் பதிலாக "விரும்பு கின்ற சுயதொழில்புரியும் ஆளொருவர் அல்லது இடம்பெயர் வேலையா ளொருவர்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின் றது.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தாற் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத் தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஆளொருவர் நிதி யத்தின் உறுப்பினராக வருமிடத்து, அவர், அடுத்துவரும் மாதத்தின் கடைசி நாளன்று அல்லது அதற்கு முன்னர், இருபத்தைந்து ரூபாவுக்கு அல்லது அதன் பெருக்கத்துக் குச் சமமான தொகையிலான உதவுதொகையொன்றை ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் செலுத்துதல் வேண்டும்; எவ்வாறாயினும், மாதாந்த உதவுதொகை பஞ்சாங்க ஆண் டின்போது மாறுதிருத்தல் வேண்டும்.",

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "தாம் சுயதொழில் புரியா தொழிந்த தேதியிலிருந்து" என்ற சொற்களுக்குப் பதிலாக "தாம் சுயதொழில்புரியாதொழிந்த தேதியிலிருந்து அல்லது இலங்கைக்கு வெளியே, தொழில்புரியாதொழிந்த தேதியிலி ருந்து" என்ற சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூல மும் :—

"(4) ஓராம் உட்பிரிவின்கீழ் நிதியத்தின் உறுப்பினரொருவராக வருகின்ற ஆளொருவரினால் பஞ்சாங்க ஆண்டொன்றில் அடுத்தடுத்த மூன்று மாதங்களுக்கு அல்லது பஞ்சாங்க ஆண்டொன்றில் கூட்டுமொத்தமாக ஐந்து மாதங்களுக்கு உதவுதொகைகள் கொடுப்பனவு செய்யப்படாத சந்தர்ப் பத்தில், நிதியத்துக்கான அவரது உதவுதொகைகளின் மீது அப்பஞ்சாங்க ஆண்டுக்காக அத்தகைய உறுப்பினர் ஏதேனும் வட்டிக்கோ அல்லது பங்கிலாபத்துக்கோ உரித் துடையவராதலாகாது.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தினை நீக்கஞ்செய்வதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய காப்புவாசகத்தினை இடுவதன் மூல மும் இத்தால் திருத்தப்படுகின்றது:—

முதன்மைச் சட்டவாக்கத் தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"ஆயின், இச்சட்டத்தின்கீழான ஒரு நலனுக அல்லது நிதியத்தின் உறுப்பினர் ஒருவர் தொடர்பாக ஏதேனும் தொகையானது செலுத்தப் பட்ட பஞ்சாங்க ஆண்டின் ஜனவரி முதலாம் தேதி தொடங்கி, அத் தொகையினைக் கொடுப்பனவுசெய்த தேதிக்கு முந்திய மாதத்தின் கடைசிநாள்வரையில் முடிவடைவதான காலப்பகுதிக்கு, ஆண்டொன் றுக்கு மூன்று வீதப்படி அக்காலப்பகுதி முடிவடையும் தேதியன்று

அவ்வுறுப்பினரின் தனிப்பட்ட கணக்கிற்கு அத்தகைய தொகைக்கு வட்டி செலுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் **பிரிவை மாற்றீடு** செய்தல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"ஊழியம் முடிவுறுவதன்மேல் ஊழியர்களுக்கான நன்மைகளை கொடுப்பனவு செய்தல்.

23. (1) இருபத்திநான்காம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, எவரேனும் ஊழியரின் தனிப்பட்ட கணக்கில் அவரது வரவிலிருக்கும் தொகை, அவரது ஊழியம் முடிவுறுவதன்மேல் அத்தகைய ஊழியருக்குச் சபையினால் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும் :

ஆயின், நிதியத்தின் உறுப்பினரொருவர், பின்வரும் சந்தர்ப்பங்களைத்தவிர, ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றில் ஒரு தடவைக்கு மேற்பட தமது தனிப்பட்ட கணக்கில் அவரது வரவிலிருக்கும் ஏதேனும் பணத்தொகையை மீளப்பெறுவதற்கு உரித்துடையவராதலாகாது :—

(அ) உறுப்பினரொருவர் அறுபது வயதுக்கு மேற்பட்டவராகவிருக்குமிடத்து ; அல்லது

(ஆ) இலங்கைக்குத் திரும்புகின்ற முன்னமின்றி **அல்லது வெளிநாட்டில் நிரந்தரமாக வதிவதற்**காகத்தாம் இலங்கையை விட்டுச்செல்லவுள்ளாரென, ஆவணச் சான்றுமூலம் உறுப்பினரொருவர் சபையைத் திருப்திப்படுத்துமிடத்து.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எப்படியிருப்பினும், இச்சட்டமானது ஏற்புடைத்தாகும் ஊழியர் ஒருவர் ஓய்வூதியம் பெறற்பாலதான தொழில் ஒன்றினை—

(i) பகிரங்க சேவையில் ;

(ii) 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் ஆட்சிச் சேவைச் சட்டத்தினால் அமைக்கப்பட்ட உள்ளூர் ஆட்சிச் சேவையில் ;

(iii) 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின் 47 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மாவட்ட சேவையில் ; அத்துடன்

(iv) உள்ளூர் ஆட்சிச் சேவையில் உறுப்பினர் ஒருவராக வல்லாது ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் சேவையில்,

ஏற்றுக்கொள்ளுமிடத்து, அத்தகைய ஓய்வூதியம் பெறற்பாலதான நியமனத்தினை அவர் ஏற்றுக்கொள்ளும் நாளில் அத்தகைய ஊழியரின் தனிப்பட்ட கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகையானது, சபையினால் அத்தகைய **ஊழியருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்".**

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "23 ஆம் பிரிவிற்கான காப்புவாசகம்" என்ற சொற்களுக்கும் எழுத்துக்களுக்கும் பதிலாக "23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகம்" என்ற சொற்களையும் எழுத்துக்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஊழியர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ் ஒன்றின் உண்மைத் தன்மையினை அவர் சந்தேகிப்பதற்கான காரணமுள்ளவிடத்து, சபைத் தவிசாளர், அத்தகைய ஊழியரை உரிய முறையில் அமைக்கப்பட்ட மருத்துவச் சபையினால் அல்லது அரசாங்க மருத்துவ அலுவலர் ஒருவரினால் மீளப் பரிசோதிப்பதற்கென ஆற்றுப்படுத்தலாம் என்பதுடன் அத்தகையவாறான மீள்பரிசோதனையின்மேல் மூல மருத்துவச் சான்றிதழானது ஏதேனும் முக்கியமான விடயத்தில் பொய்யானதெனக் காணப்படுமிடத்து, சபையானது அத்தகைய சான்றிதழை ஏற்க மறுக்கலாம்; அத்துடன், சபையானது எதிர்காலத்தில் அத்தகைய பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலரால் வழங்கப்படும் மருத்துவச் சான்றிதழ்களை ஏற்க மறுப்பதற்கும் உரித்துடையதாதல் வேண்டும்.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "தவறுகை புரிபவரான தொழில்தருநர் எங்கே வதிகிறாரோ அங்கே அல்லது அத்தகைய தொழில்தருநருக்குச் சொந்தமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எங்கே அமைந்துள்ளதோ அங்கே" என்ற சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய தவறுகை புரிபவரான தொழில்தருநரால் எவ்வூழியர் தொடர்பாக தவறுகை புரியப்பட்டுள்ளதோ அவர் எங்கே தொழிலுக்கு இப்போது அமர்த்தப்படுகின்றார் அல்லது முன்னர் அமர்த்தப்பட்டிருந்தார்" என்ற சொற்களை இடுவதன்மூலமும்,"; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "அத்தகைய தொழில் தருநரது வேலை இடம்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "எவ்வூழியர் தொடர்பாக தவறுகை புரியப்பட்டதோ அத்தொழில்பெறுநரின் வேலை இடம் எந்தப் பிரிவில் அமைந்துள்ளதோ அந்தப் பிரிவு" என்ற சொற்களை இடுவதன்மூலமும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"சபை அல்லது சபையால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் கோரிக்கைகளைத் தீர்மானித்தல்.

33. (1) நிதியத்திலிருந்து செய்யப்படும் ஏதேனும் கொடுப்பனவுக்கான எல்லாக் கோரிக்கைகளும் சபையால் அல்லது அதற்கென சபையால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், சபையினது அல்லது அத்தகைய அலுவலரது தீர்மானமானது, அத்தகைய தீர்மானத்திற்கு எதிராக செய்யப்பட்ட மேன்முறையீட்டின் தீர்ப்பு எதற்கும் அமைவாக, முடிவானதாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையினது அலுவலர் ஒருவரால் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்றினால் அதிருப்தியுற்ற ஆள் எவரும், அத்தகைய ஆளுக்கு அத்தகைய தீர்மானம்பற்றி அறிவிக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள்ளாக, சபைக்கு அதுபற்றி மேன்முறையீடு செய்யலாம். சபையானது, ஏதேனும் மேன்முறையீட்டின்மேல், அலுவலரது தீர்மானத்தை உறுதிப்படுத்தலாம், மாற்றலாம் அல்லது ஒதுக்கித்தள்ளலாம்; அத்துடன் அத்தகைய மேன்முறையீடெதனிலும் சபையினது தீர்மானமானது, 34 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, சபையினது தீர்மானமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலம் அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(3) மேன்முறையீட்டுக்கான மனு விண்ணப்பகாரருக்கு தீர்மானம் அறிவிக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள்ளாகக் கோப்பிடப்படுதல் வேண்டும். 33 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும் இப்பிரிவினதும் நோக்கங்களுக்காக, ஆள் ஒருவருக்கு தீர்மானம் ஒன்று அறிவிக்கப்பட்ட தேதி. அத்தகைய தீர்மானமானது அத்தகைய ஆளுக்கு பதிவுத் தபால்மூலம் அஞ்சலில் சேர்க்கப்பட்ட தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு, அப்பிரிவின் (இ) என்னும் பந்தியினை நீக்குவதன்மூலம், அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகிறது :—

"(இ) இச்சட்டத்தினால் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் அத்தகைய தொழில்தருநரால் வைத்திருக்கப்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் இடாப்பினது அல்லது பதிவேட்டினது உண்மைப் பிரதி அல்லது பிரித்தெடுத்த பகுதி அல்லது அத்தகைய இடாப்பின் அல்லது பதிவேட்டின் ஏதேனும் பாகம்.".

15. பின்வரும் புதிய பிரிவுகள் 40 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 40அ, 40ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :

முதன்மைச் சட்டவாக்கத்தில் 40அ, 40ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

"சபையின் உறுப்பினர்களுக்கும், அலுவலர்களுக்கும், சேவையாளர்களுக்கும் பாதுகாப்பு.

40அ. சபையின் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், இச்சட்டத்தின்கீழான அவரது தத்துவங்களைப் பின்பற்றி அல்லது பின்பற்றும் உத்தேசத்தில் அல்லது அவரது கடமைகளைப் புரிகையில், நல்லெண்ணத்துடன் செயலாற்றும்போது அவர் செய்திருக்கக்கூடிய அல்லது செய்யாது விட்டிருக்கக்கூடிய எதுதொடர்பிலும் குடியியல் வகையில் அல்லது குற்றவியல் வகையில் பொறுப்பாளியாதலாகாது.

சபைசார்பில் உறப்பட்ட செலவுகளின் மீளளிப்பு.

40ஆ. சபையின் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளர் ஒவ்வொருவருக்கும், அவரது துர்நடத்தையினுல் அல்லது வேண்டுமென்றேசெய்த தவறுகையினுல் ஏற்பட்டது எனச் சபை கருதக்கூடியதான இழப்புகளும் செலவுகளும் தவிர்ந்த, அவரது கடமைகளைப் புரிகையில் அவரால் உறப்பட்ட அல்லது அவருக்கு ஏற்பட்ட மற்றைய எல்லா இழப்புகளுக்கும் செலவுகளுக்கும் நிதியத்திலிருந்து நட்டோத்திரவாதம் செய்யப்படுதல் வேண்டும்.".

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "உழைப்புக்கள்" என்பதின் வரைவிலக்கணத்திற்கு நேர் முன்னர் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"உரியமுறையில் அமைக்கப்பட்ட மருத்துவச் சபை" என்பது, எந்த ஆட்களால் சமர்ப்பிக்கப்பட்டதான மருத்துவச் சான்றிதழ் நியாயமான சந்தேகத்தைத் தோற்றுவிக்கிறதோ அந்த ஆட்களைப் பரிசோதிக்கும் நோக்கத்திற்காகச் சபைத் தவிசாளரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்பேரில் மருத்துவச் சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியால் நியமிக்கப்பட்ட மருத்துவச் சபை ஒன்று எனப் பொருளாகும் ;

(2) "உழைப்புக்கள்" என்ற வரைவிலக்கணத்திற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :—

"உழைப்புக்கள்" என்பது—

(அ) கூலிகள், சம்பளம் அல்லது கட்டணம் ;

(ஆ) வாழ்க்கைச் செலவுப்படி, விசேட வாழ்க்கைப்படி அத்துடன் வேறும் ஏதேனும் அவைபோன்ற படிகள் ;

(இ) விடுதலை நாட்கள் தொடர்பான கொடுப்பனவுகள்;

(ஈ) விதிக்கப்பட்ட தொழில்களில் தொழில்தருநரால் ஊழியர்களுக்கு ஏற்பாடுசெய்து கொடுக்கப்படும் சமைத்த அல்லது சமைக்காத ஏதேனும் உணவின் காசுப் பெறுமதி அத்துடன் அவ்வாறு ஏற்பாடு செய்துகொடுக்கப்படும் ஏதேனும் உணவின் தயாரிப்பில் அல்லது கலப்பில் பயன்படுத்தப்படும் ஏதேனும் அத்தகைய பொருளின் காசுப் பெறுமதி, அத்தகைய பெறுமதி, தொழில் ஆணையாளருக்கு மேன்முறையீடு செய்வதற்கு அமைவாகத் தொழில்தருநரால் மதிப்பிடப்படும். அத்தகைய மேன்முறையீட்டில் தொழில் ஆணையாளரின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்;

(உ) சாப்பாட்டுப்படி; அத்துடன்

(ஊ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு வகையான ஊதியம்.

(3) "ஊழியர்" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக, பின்வரும் வரைவிலக்கணத்தினை இடுவதன்மூலமும் :—

"ஊழியர்" என்பது, ஒப்பந்தமானது வெளிப்படையானதோ, உட்கிடையானதோ அல்லது வாய்மொழி மூலமானதோ, எழுத்திலுள்ளதோ, அத்துடன் அது சேவை ஒப்பந்தமோ அல்லது பயிற்சி ஒப்பந்தமோ, அல்லது உழைப்பு வேலை எதனையும் தனிப்பட்ட முறையில் நிறைவேற்றப்பட வேண்டிய ஒப்பந்தமாயினுஞ்சரி ஏதேனும் முறையில் தொழில்தருநரொருவருடன் ஒப்பந்தமொன்று செய்துகொண்ட எவரேனும் ஆள் எனப் பொருளாவதுடன் எவரேனும் அத்தகைய ஆள் ஏதேனும் குறிக்கப்பட்ட நேரத்தில் தொழிலிருந்திருப்பினுஞ்சரி, இருந்திருக்காவிடினுஞ்சரி அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் சாதாரணமாக வேலைக்கமர்த்தப்பட்ட எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்.;

(4) "தொழில்தருநர்" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :—

"தொழில்தருநர்" என்பது எவரேனும் வேலையாளை வேலைக்கமர்த்துபவரான எவரேனும் ஆள் அல்லது அவர் சார்பில் எவரேனும் வேலையாளை வேலைக்கமர்த்துபவரான எவரேனும் ஆள் எனப் பொருளாவதுடன் (குழுவானது ஒரு குழுமமாக, கம்பனியாக, கூட்டுத்தாபனமாக அல்லது தொழிற்சங்கமாக இருப்பினுஞ்சரி) தொழில்தருநர்களின் குழு ஒன்றினையும், வேறு எவரேனும் ஆள் சார்பில் எவரேனும் வேலையாளை வேலைக்கமர்த்தும் ஆளையும் உள்ளடக்குவதுடன் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட வியாபார பொறுப்புமுயற்சியொன்றின் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை, சட்டப்

படியான மரபுரிமையாளரை, சட்டவழியுரிமையாளரை, நிறைவேற்றுநர் அல்லது நிருவாகி ஒருவரை, கம்பனி ஒன்றின் ஒழிப்போனை கூட்டிணைக்கப்படாத குழு ஒன்றின் விடயத்தில் அத்தகைய குழுவின் தலைவரை அல்லது செயலாளரை, அத்துடன் பங்காண்மை ஒன்றின் விடயத்தில், முகாமைப் பங்காளர் ஒருவரை அல்லது முகாமையாளரையும் உள்ளடக்கும்.

(5) "தொழில்தருநர்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

"உள்ளூர் அதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேச சபை எனப் பொருளாவதுடன், ஏதேனும் அத்தகைய சபையால் பிரயோகிக்கப்படும் புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்களுக்கு, கடமைகளுக்கு, அத்துடன் பணிகளுக்கு நேரொத்த அல்லது அவை போன்ற தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையினையும் உள்ளடக்கும்.".

"இடம்பெயர் வேலையாளர்" என்பது, ஆளொருவர் இலங்கைப் பிரசையாகவிருந்து ஆனால் இலங்கைக்கு வெளியே தொழில்புரிகின்றவிடத்து, அத்தகைய ஆள் அவ்வாறு தொழில்புரிகின்ற காலம்வரை அத்தகைய ஆள் என்று பொருளாகும்.".

17. முதன்மைச் சட்டவாக்கத்தில் எது எவ்வாறிருப்பினும்,— நிலைபெயர் கால ஏற்பாடுகள்

(அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அச்சட்டத்தின் கருத்துக்குட்பட்ட உயர்கல்வி நிறுவனமொன்றின் ;

(ஆ) 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, தேசிய தொழிற்பயிற்சிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய தொழிற்பயிற்சிச் சபையின்,

ஊழியரொருவரின் தனிப்பட்ட கணக்கின் வரவில் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று இருக்கும் தொகை, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஆறுமாதங்களினுள் அத்தகைய ஊழியருக்குச் சபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டு டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.